முழுப்பதிப்புரிமை பெறப்பட்டது.

# கல்விப் பொது தராதர உயர்தர உதவிக் கருத்தரங்குத் தொடர் - 2013

## மீட்டல் வினாப்பத்திரம்

## பொருளியல் -1

**2 மணித்தியாலம்**

**தயாரிப்பு: கல்வியமைச்சின் வர்த்தக மற்றும் வியாபாரக் கல்விப் பிரிவு**

**கவனத்திற்குரியது:**

**1. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக**

**2. சரியான அல்லது மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

1. பின்வரும் கூற்றுகளில் நுண்பாகப் பொருளியலுக்குரிய நேர்பொருளியல் கூற்று யாது?
   1. மொத்தக் கேள்வி அதிகரிக்கும்போது விலைமட்டம் உயரும்.
   2. செலவிடத்தக்க வருமானம் குறைவடையும்போது தனியார் சேமிப்பு குறைவடையும்.
   3. நாட்டின் பொது விலைமட்டம் 12% ஆல் அதிகரிப்பது பொருளாதார ரீதியல் பாதிப்பாகும்.
   4. சாதாரண பண்டமொன்றின் விலை அதிகரிக்கும்போது அதன் கேள்வித் தொகை குறைவடையும்.
   5. வட்டி விகிதம் அதிகரிக்கும்போது வியாபார முதலீடுகள் வீழ்ச்சியடையும்.

2. பின்வருவனவற்றுள் பொருளாதார வளமாகக் கருதப்படுவது
   1. நெற்பயிர்ச் செய்கைக்குப் பயன்படும் பருவக்காற்று மழை .
   2. பப்படம் உலர்வதற்குப் பயன்படுத்தப்படும் சூரியஔி.
   3. சூரிய சக்தியை உற்பத்தி செய்யப் பயன்படும் சூரிய ஔி.
   4. நீர்மின் உற்பத்திக்குப் பயன்படும் ஆற்றுநீர்.
   5. உணவு சமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் சூரியசக்தியால் ஆன எரிசக்தி.

3. கிடையச்சில் X பண்டத்தையும் குத்தச்சில் Y பண்டததையும் காட்டுகின்ற உற்பத்தி சாத்திய வளையி ஒன்றின் உற்பத்திச் சேர்க்கைகள் சில கீழே தரப்படுகின்றன.

| X பண்டம் | Y பண்டம் |
|---|---|
| 0 | 50 |
| 40 | 40 |
| 70 | 30 |
| 85 | 20 |
| 95 | 10 |
| 100 | 0 |

மேற்படி தகவல்களின்படி

   1. சகல உற்பத்தி மட்டங்களிலும் அமயச் செலவு நிலையான பெறுமதியைப் பெறுகின்றது.
   2. X மற்றும் Y பண்டங்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் நிலையானது.
   3. X பண்டத்திற்குப் பயன்படுத்தப்படும் வளங்கள் Y பண்டத்ததுக்கும் பூரண பதிலீடாகும்.
   4. சாத்திய வளையியின் வழியாக மேலே செல்லும்போது அமையச்செலவு விகிதம் படிப்படியாகக் அதிகர்க்கும்.
   5. சாத்திய வளையியின் வழியாக மேலே செல்லும்போது அமையச்செலவு விகிதம் படிப்படியாகக் குறைவடையும்.

4. “வளப்பங்கீட்டில் வினைதிறன்” தொடர்பாக மிகவும் சரியான கூற்றாவது,
   1. சமூகத்தெரிவுக்குப் பொருத்தமான வகையில் பண்டங்கள் மற்றும் சேவைகள் உற்பத்திக்குப் அருமையான வளங்களைப் பங்கீடு செய்வதாகும்.
   2. வறுமை குறைவடையும் வகையில் பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக வளங்களைப் பங்கீடு செய்வதாகும்.
   3. விலைகுறைந்த வளங்களை அதிகமாகவும் விலையுயர்ந்த வளங்களைக் குறைவாகவும் பயன்படுத்தும் உற்பத்தி முறைகளைத் தெரிவு செய்வதாகும்.
   4. வருமானப் பங்கீட்டில் ஏற்றத்தாழ்வு குறைவடையும் வகையில் வளங்களை உற்பத்தி நடவடிக்கைகளிடையே பங்கீடு செய்வதாகும்,
   5. உள்ளீட்டலகொன்றிலிருந்து உச்சமட்ட உற்பத்தியைப் பெறக்கூடிய வகையில் உற்பத்தி நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதாகும்.

5. விலை முறைமை தொடர்பாக மிகவும் சரியான கூற்றாவது

1. கேள்வி மற்றும் நிரம்பல் சக்திகளின் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் தீர்மானிக்கப்படும் முறைமை ஆகும்.
2. கேள்வி மற்றும் நிரம்பல் சக்திகளின் அடிப்படையில் உற்பத்திக் காரணிகளின் விலைகள் தீர்மானிக்கப்படும் முறைமையாகும்.
3. கேள்வி மற்றும் நிரம்பல் சக்திகளின் அடிப்படையில் பொருட்கள் சேவைகளினதும். உற்பத்திக் காரணிகளினதும் விலைகள் தீர்மானிக்கப்படும் முறைமையாகும்.
4. கேள்வி மற்றும் நிரம்பல் சக்திகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் விலையின் மூலம் உற்பத்திப் பங்கீடு செய்யப்படும் முறைமையாகும்.
5. சுதந்திரமாக நிர்ணயமாகும் விலையினை அடிப்படையாகக் கொண்டு அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் முறைமையாகும்.

6. உற்பத்தி செய்வது எப்படி என்ற பிரச்சினை சந்தைப் பொருளாதாரமொன்றில் தீர்த்துக்கொள்ளப்படுவது

1. உற்பத்திக் காரணிச் சந்தை பெற்றுத் தருகின்ற விலைச் சமிஞ்சை என்பது காட்டப்படும்.
2. பொருட்சந்தை பெற்றுத் தருகின்ற விலைச் சமிஞ்ஞைகள் மீது காட்டப்படும் பிரதிபலிப்பின் மூலமாகும்.
3. அரசின் ஆணைகளுக்கு பொதுமுயற்சியாளர்கள் காட்டுகின்ற பிரதிபலிப்பின் மூலமாகும்.
4. நியாயமான வருமானப் பரம்பல் என்ற இலக்கை அடைந்துகொள்வதற்காக தயாரிக்கப்படும் கொள்கைகளுக்குக் காட்டப்படும் பிரதிபலிப்பின் மூலமாகும்.
5. ஆகக்குறைந்த சம்பளம் மற்றும் மஜதக்கும் வட்டி விகிதம் என்பவற்றின் மீது தனியார் முயற்சியாளர்கள் காட்டுகின்ற பிரதிபலிப்பின் மூலமாகும்.


7. சீனிக்கான கேள்விக்கோடு இடப்புறம் நகர்வதற்குக் காரணமாக அமைவது,

1. சீனியின் விலை குறைவடைதல்.
2. கருப்பட்டியின் விலை அதிகரித்தல்.
3. தேயிலையின் விலை அதிகரித்தல்.
4. சீனியின் உற்பத்திச் செலவு குறைவடைதல்.
5. சீனியை நுகருகின்ற மக்களின் வருமானம் அதிகரித்தல்.

8. சாதாரணப் பண்டமொன்றின் கேள்வித்தொகை அதிகரிப்பதற்குக் காரணமாக அமைவது கீழே தரப்படுகின்ற எக்காரணியாகும்?

1. குறித்த பண்டத்திற்கான நுகர்வோன் சுவை அதிகரித்தலும், பிரதியீட்டுப் பண்டங்களின் விலை அதிகரித்தலும்.
2. நுகர்வோரின் பணவருமானம் அதிகரித்தலும் பிரதியீட்டுப் பண்டங்களின் விலை அதிகரிப்பும்.
3. நுகர்வோனின் பணவருமானம் மற்றும் அப்பண்டத்தின் சார்புவிலை அதிகரித்தல்.
4. நுகர்வோரின் மெய்வருமானம் மற்றும் பிரதியீட்டுப் பண்டங்களின் விலைகள் அதிகரித்தல்.
5. அப்பண்டத்தின் சார்புவிலை குறைவடைதலும் கொள்வனவாளரின் மெய்வருமானம் அதிகரிப்பதும்.


9. குறித்த பண்டமொன்றின் கேள்விக்கோடு கீழுள்ள உருவில் காட்டப்பட்டுள்ளதுடன் அக்கோட்டின் நடுப்புள்ளி A புள்ளியினால் காட்டப்படுகின்றது.




மேலுள்ள கேள்விக்கோடு தொடர்பாக மிகவும் பொருத்தமான கூற்றாவது

1. $P_1$ ற்குக் குறைந்த விலைகளின் கீழ் விலைக் கேள்விநெகிழ்ச்சியானது ஒன்றைவிட குறைந்த பெறுமதியைப் பெறுவதுடன், விலை குறைவடையும் போது விற்பனையாளர் வருமானம் அதிகரிக்கும்.
2. $P_1$ ஐவிட உயர்ந்த விலைகளின் கீழ் விலைக் கேள்விநெகிழ்ச்சியானது ஒன்றைவிடக் கூடிய பெறுமதியைப் பெறுவதுடன், விலை அதிகரிக்கும்போது விற்பனையாளர் வருமானம் குறைவடையும்.
3. $P_1$ ற்குக் கீழுள்ள விலைகளின் கீழ் விலைக் கேள்விநெகிழ்ச்சியானது ஒன்றைவிட உயர்ந்த பெறுமதியைப் பெறுவதுடன், விலை குறைவடையும்போது விற்பனையாளர் வருமானங்கள் குறைவடையும்.
4. $P_1$ ஐவிட உயர்ந்த விலைகளின் கீழ் விலைக் கேள்விநெகிழ்ச்சியானது ஒன்றைவிட குறைந்த பெறுமதியைப் பெறுவதுடன், விலை குறைவடையும்போது விற்பனையாளர் வருமானங்கள் உயர்வடையும்.
5. $P_1$ ஐவிட குறைந்த விலைகளின் கீழ் விலைக் கேள்விநெகிழ்ச்சியானது ஒன்றைவிட குறைந்த பெறுமதியைப் பெறுவதுடன், விலை அதிகரிக்கும்போது விற்பனையாளர் வருமானங்கள் உயர்வடையும்.

10.




$S_1$ மற்றும் $S_2$ நிரம்பல் கோடுகள் தொடர்பாகக் கீழே தரப்படும் எக்கூற்றுகள் உண்மையானவை

| | **$S_1$ நிரம்பல் கோட்டில் சகல புள்ளிகளிலும் நெகிழ்ச்சி** | **$S_2$ நிரம்பல் கோட்டின் வழியே மேலே செல்லும்போது நெகிழ்ச்சி** |
|---|---|---|
| 1. | ஒன்றுக்குச் சமனாகும் | ஒன்றை அண்மிக்கும் வரை கீழ்நோக்கிச் செல்லும். |
| 2. | ஒன்றுக்குச் சமனாகும் | ஒன்றை அண்மிக்கும் வரை மேல் நோக்கிச் செல்லும். |
| 3. | ஒன்றைவிடக் குறைவடையும் | ஒன்றை அண்மிக்கும் வரை கீழ்நோக்கிச் செல்லும். |
| 4. | ஒன்றைவிட அதிகம் | ஒன்றை அண்மிக்கும் வரை மேல்நோக்கிச் செல்லும். |
| 5. | ஒன்றுக்குச் சமனாகும் | படிப்படியாக அதிகரிக்கும். |

11. விவசாயப் பண்டமொன்றுக்கான கேள்விக்கோட்டுச் சமன்பாடு $Qd = 60 - 5P$ . இப்பண்டத்தின் முதலாவது போகத்தின்போது மொத்த நிரம்பல் 30 அலகுகளாக இருந்ததுடன் இரண்டாவது போகத்தின்போது நிரம்பல் 40 அலகுகளாகும். இத்தகவல்களின்படி இரண்டாவது போகத்தின்போது நுகர்வோன் மிகை அதிகரித்துள்ள அளவு,

1. 35 ஆகும். 2. 70 ஆகும். 3. 90 ஆகும் 4. 160 ஆகும். 5. 180 ஆகும்

12. குறிப்பிட்ட ஒரு பண்டம் 20 ரூபா வீதம் 400 அலகுகள் விற்பனை செய்யப்பட்டதுடன் விலை 30 ரூபா வரை அதிகரித்தபின் விற்பனை செய்யப்பட்ட அளவு 200 அலகுகளாகக் குறைந்தது. இந்நிகழ்வுக்குப் பின்வரும் எக்காரணி ஏதுவாக அமையக்கூடும்.

1. பிரதியீட்டுப் பண்டமொன்றின் விலை குறைவடைதல்.
2. இணைப்புப் பண்டமொன்றின் விலை குறைவடைதல்.
3. குறிப்பிட்ட பண்டத்தின்மீது அரசு வரியொன்றை விதித்தல்.
4. குறிப்பிட்ட பண்டத்திற்கு அரசு மானியமொன்றை வழங்குதல்.
5. நுகர்வோன் சுவை குறைவடைதல்.


13. சாதாரண கேள்வி மற்றும் நிரம்பல் நிலைமை ஒன்று காணப்படுகின்ற பண்டமொன்றின் உற்பத்தியாளர்மீது குறிப்பிட்ட அளவான வரியொன்று விதிக்கப்பட்டபோது சந்தையில் ஏற்படுகின்ற மாற்றத்தைச் சரியாகக் காட்டும் விடை யாது?

| | <u>நுகர்வோன் மிகை</u> | <u>உற்பத்தியாளன் மிகை</u> | <u>சமூக நலன்</u> |
|---|---|---|---|
| 1. | குறைவடையும் | அதிகரிக்கும் | குறைவடையும் |
| 2. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | குறைவடையும் |
| 3. | குறைவடையும் | குறைவடையும் | பாதிப்பில்லை |
| 4. | குறைவடையும் | குறைவடையும் | குறைவடையும் |
| 5. | குறைவடையும் | குறைவடையும் | அதிகரிக்கும் |

14. சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற சாதாரணக் கேள்வி நிரம்பல் நிலைமைகள் காணப்படுகின்ற பண்டமொன்றை விற்பனை செய்யவேண்டிய உச்சவிலை அரசினால் நிரணயிக்கப்பட்டதுடன் கறுப்புச் சந்தை விலையொன்று ஏற்படுவதற்கு எவ்விதச் சந்தர்ப்பமும் வழங்கப்படவில்லை. ஊச்சவிலை நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர் கட்டாயமாக சந்தையில் நிகழக்கூடிய நிலைமைகளைச் சரியாகக் காட்டும் விடையாது?

| | **நுகர்வோன் செலுத்தவேண்டிய விலை** | **உற்பத்தியாளனுக்கு விலை** | **கிடைக்கும் சமூக நலன்** |
|---|---|---|---|
| 1. | வீழ்ச்சியடையும் | அதிகரிக்கும் | வீழ்ச்சியடையும் |
| 2. | வீழ்ச்சியடையும் | வீழ்ச்சியடையும் | வீழ்ச்சியடையும் |
| 3. | வீழ்ச்சியடையும் | வீழ்ச்சியடையும் | அதிகரிக்கும் |
| 4. | வீழ்ச்சியடையும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 5. | வீழ்ச்சியடையும் | மாற்றமடையாது | வீழ்ச்சியடையும் |


15. கீழுள்ள வரிப்படத்தில் காட்டப்படுவது அரசினால் உத்தரவாத விலை விதிக்கப்பட்டு மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்வதன்மூலன் விலை உதவித்திட்டம் ஒன்று செயற்படுத்தப்படும் ஒரு நிலைமை ஆகும்.




மேலே உள்ள வரிப்படத்தின்படி உத்தரவாத விலை நிர்ணயிக்கப்பட்டதன் பின் கீழுள்ள எந்தவிடை சரியானதாகும்.


| | அரசு தாங்கும் செலவு | பொருளாதார மிகையின் அதிகரித்த அளவு | இழக்கப்படும் சமூகநலன் |
|---|---|---|---|
| 1. | 600 | 160 | 80 |
| 2. | 400 | 80 | 80 |
| 3. | 400 | 80 | 160 |
| 4. | 400 | 80 | 320 |
| 5. | 600 | 160 | 440 |

16. கீழுள்ள வரிப்படத்தில் காட்டப்படுவது உற்பத்திச் செயற்பாட்டுக்குரிய எல்லை உற்பத்தி தொழிற்படும் விதமாகும். இக்கோட்டின் சரியான கூற்று யாது?




1. மாறும் காரணிகளை L1 வரை அதிகரிக்கும்போது எல்லை உற்பத்தியைவிட சராசரி உற்பத்தி உயர்வாக அமையும்.
2. மாறும் காரணிகள் L2 ஐ விட அதிகரிக்கும்போது நிறுவனத்தின் மொத்த உற்பத்தி அதிகரிக்கும்.
3. L2 மாறும் காரணி மட்டத்தின்போது மொத்த உற்பத்தி ஆகக்கூடிய மட்டத்தில் இருக்கும்.
4. மாறும் காரணிகளை L1 வரை அதிகரிக்கும்போத குறைந்துசெல்லும் எல்லை விளைவுவிதி செயற்படும்.
5. L1 இலிருந்து L2 வரை மாறும் காரணிகளை அதிகரிக்கும்போது மொத்த உற்பத்தி படிப்படியாகக் குறைவடையும்.

17. நிறைபோட்டி உற்பத்தி நிறுவனமொன்றில் குறுங்கால உற்பத்திச் செலவுக்கோடு வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.




வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள தகவல்களுக்கிணங்க இந்நிறுவனத்தினால் எடுக்கப்படவேண்டிய முக்கியமான தீர்மானம் யாது?

1. $Q_2$ வரை உற்பத்தியை அதிகரிப்பதன்மூலம் இலாபத்தை உச்சப்படுத்திக் கொள்ள வேண்டும்.
2. எல்லைச்செலவு மற்றும் சராசரிச் செலவு சமமப்படுகின்ற Q3 அளவு உற்பத்தி செய்யப்பட வேண்டும்.
3. $Q_3$ உற்பத்தியைவிட அதிகமாக உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்
4. உற்பத்தியைக் கைவிட வேண்டும்.
5. நிறுவனம் Q1 அளவு உற்பத்தியில் ஈடுபட்டு இலாபத்தை இழிவுபடுத்திக்கொள்ள வேண்டும்.


18. நிறைபோட்டி உற்பத்தி நிறுவனமொன்றின் குறுங்கால செலவு தொடர்பான தகவல்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| **உற்பத்தி (அலகு)** | **எல்லைச் செலவு (ரூபா)** |
|---|---|
| 1. | 50 |
| 2 | 30 |
| 3 | 10 |
| 4 | 14 |
| 5 | 26 |
| 6 | 40 |

இந்நிறுவனத்தின் மொத்த நிலையான செலவு 40 ரூபா ஆகும் எனில் உற்பத்தி 4 அலகுகளில் சராசரிச் செலவு.

1. 3.50 2. 10 3. 14 4. 26 5. 36

19.




மேலுள்ள வரிப்படத்தில் Aஇலிருந்து B வரை உற்பத்திப் புள்ளி மாற்றமடையும்போது கீழே தரப்பட்டுள்ள எந்தக் கூற்று சரியானதாகும்.

| மோத்தக் கேள்வி மாற்றமடையும் விதம் | பணவீக்க அல்லது பணச்சுருக்கப் போக்கு |
|---|---|
| 1. அதிகரிக்கும் | பணவீக்கமாகும் |
| 2. அதிகரிக்கும் | பணச்சுருக்கமாகும் |
| 3. குறைவடையும் | பணச்சுருக்கமாகும் |
| 4. குறைவடையும் | பணவீக்கமாகும் |
| 5. குறைவடையும் | பணவீக்கமின்மையாகும் |

20. தேசிய கணக்குகளைத் தயாரிக்கும்போது கீழ் தரப்பட்டுள்ளவற்றுள் எது சேர்க்கப்படும்.

1. தான் குடியிருக்கும் வீட்டை ரூபா 2 இலட்சத்துக்கு விற்பனை செய்தல்.
2. பயிர்ச்செய்கைக்காக நிலமொன்றைக் கொள்வனவு செய்தல்.
3. பங்குச் சந்தையிலிருந்து பங்குகளை கொள்வனவு செய்தல்.
4. சொத்துக் கம்பனியொன்றிடமிருந்து புதிய வீடொன்றைக் கொள்வனவு செய்தல்.
5. அரசின் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்தல்.

21. கீழேதரப்பபடுவது கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்று தொடர்பான புள்ளிவிபரங்கள் சிலவாகும்.

| | |
|---|---|
| தேறிய உள்நாட்டு வருமானம் | 20,000 |
| வெளிநாட்டு தேறிய காரணி வருமானம் | -500 |
| மூலதனத் தேய்வு | 4,000 |
| தேறிய நேரில் வரி | 800 |

இத்தகவல்களின் படி சந்தை விலையின் கீழ் மொத்தத் தேசிய உற்பத்தியாவது

1. 16,300 2. 19,200 3. 19,500 4. 24,000 5. 24,300

22. தேசிய சேமிப்பைக் கணிப்பிடுகின்ற விதத்தைக் காட்டும் சரியான முறை எது?

1. உள்நாட்டுச் சேமிப்பு + தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் + வெளிநாட்டு தேறிநடைமுறை மாற்றல் = தேசிய சேமிப்பு
2. உள்நாட்டுச் சேமிப்பு - தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் + வெளிநாட்டு தேறிநடைமுறை மாற்றல் = தேசிய சேமிப்பு
3. உள்நாட்டுச் சேமிப்பு + வெளிநாட்டுக் தேறிய காரணி வருமானம் - வெளிநாட்டு தேறிநடைமுறை மாற்றல் = தேசிய சேமிப்பு
4. உள்நாட்டுச் சேமிப்பு + வெளிநாட்டுக் தேறிய காரணி வருமானம் - அரச சேமிப்பு = தேசிய சேமிப்பு
5. உள்நாட்டுச் சேமிப்பு – தனியார் சேமிப்பு + அரச சேமிப்பு = தேசிய சேமிப்பு

23. வருமானம் ரூபா 2,000 இல் சராசரி நுகர்வு நாட்டம் 0.8 ஆகும் அதேவேளை வருமானம் ரூபா 4,000 இல் எல்லை நுகர்வு நாட்டம் 0.7 ஆகும். இவ்எளிய பொருளாதாரத்தில் சேமிப்புச் சார்பாவது

1. $S = -400 + 0.8Y$ 2. $S = 400 + 0.2Y$ 3. $S = -400 + 0.2Y$ 4. $S = -400 + 0.4Y$ 5. $S = -400 + 0.3Y$

24. எல்லை நுகர்வு நாட்டம் 0.75 ஆகவுள்ள ($mpc = 0.75$) பொருளாதாமொன்று நிறைதொழில்மட்ட சமனிலை உற்பத்தி மட்டமொன்றை அடைவதற்கு உற்பத்தியினை ரூபா பில்லியன் 600 இனால் அதிகரிக்க வேண்டும் அதற்காக முதலீடுகள் எந்தளவினால் அதிகரிக்கப்பட வேண்டும்?

1. ரூபா பில்லியன் 15 2. ரூபா பில்லியன் 75
3. ரூபா பில்லியன் 150 4. ரூபா பில்லியன் 300 5. ரூபா பில்லியன் 600

25. தன்னியல்பான வரியைக் மட்டும் கொண்ட பொருளாதாரமொன்றில் சமநிலை உற்பத்தி மட்டம் ரூபா மில்லியன் 1760 ஆகும். கீழே சில தகவல்கள் தரப்பட்டுள்ளன.

$C = 300 + 0.75yd$ $I=100$ $T=100$


இப்பொருளாதாரத்தில் அரச நுகர்வுச் செலவானது ரூபா பில்லியன்

1. 100 ஆகும். 2. 115 ஆகும். 3. 300 ஆகும். 4. 325 ஆகும். 5. 375 ஆகும்.

26. பண அளவுக் கோட்பாட்டை விளக்கும்போது நிலையானதாக உள்ளதெனக் கருதப்படுவது

1. பண நிரம்பலும் மெய்உற்பத்தியும்.
2. நிலவும் விலைகளில் தேசிய உற்பத்தியும் விலை மட்டமும்.
3. பணநிரம்பலும் பணத்தின் சுழற்சி வேகமும்.
4. பணநிரப்பலும் விலை மட்டமும்.
5. கொடுக்கல் வாங்கல்களின் அளவும் பணத்தின் சுற்றோட்ட வேகமும்.

27. நிறை தொழில்மட்டமானது $Y_F$ இனால் காட்டப்படுகிறது. இந்நிலையை பேணுவதற்கான மொத்தச் செலவு $E_O$ ஆக காட்டப்பட்டுள்ளது.




மேலுள்ள வரபபடததனபடி பணசசுருகக இடைடவளியையும அதறகான காரணயையும சரயாக ஒழுங்குபடுத்திக் காட்டும் விடையாது?

| | பணச்சுருக்க இடைவெளி | அதற்கான காரணம் |
|---|---|---|
| 1. | A – C | பணநிரம்பல் அதிகரிப்பு. |
| 2. | A – B | பணநிரம்பல் குறைவு. |
| 3. | A – B | பணநிரம்பல் அதிகரிப்பு. |
| 4. | A – C | பணநிரம்பல் குறைவு. |
| 5. | A – B | வட்டி விகிதக்குறைவு. |

28. மொத்தப் பணத்தின் கேள்விக்கோடு வலப்புறம் நகர்வதற்குக் காரணமாக அமைவது

1. வட்டிவீதம் உயர்வடைதல்.
2. பிணைகளின் விலை அதிகரித்தல்.
3. தனியார் வருமானங்கள் குறைவடைதல்.
4. வருமானம் கிடைக்கின்ற காலஇடைவெளி குறைதல்.
5. வருமான மட்டம் அதிகரித்தல்.

29. குறிப்பிட்டதொரு பொருளாதாரம் தொடர்பாக பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன

மத்திய வங்கியிடமுள்ள வணிக வங்கி வைப்புக்கள்............................ 100
பொதுமக்களிடமுள்ள சட்டமுறைப் பணம் .........................................250
வணிக வங்கிகளிடமுள்ள சட்டமுறைப் பணம்.......................................50
வணிக வங்கிகளிடமுள்ள பொது மக்களுக்குரிய கேள்வி வைப்புக்கள்.........200
வணிக வங்கிகளிடமுள்ள கால சேமிப்பு வைப்புக்கள்...........................1450
மொத்த வதியாதோர் வெளிநாட்டு சட்டமுறைப் பணவைப்புக்கள்.................150
வெளிநாட்டு சட்டமுறை வங்கி அலகுகளிலுள்ள வதிவோர் வைப்புக்கள்........200

மேலுள்ள புள்ளி விபரங்களின்படி ஒடுங்கிய மற்றும் விரிந்த பணப்பெருக்கிகளாவது

| | M1 ஒடுங்கிய பணப்பெருக்கி | M2 விரிந்த பணப்பெருக்கி |
|---|---|---|
| 1. | 0.7 | 4.3 |
| 2. | 0.9 | 4.75 |
| 3. | 1.1 | 4.75 |
| 4. | 4.70 | 5.6 |
| 5. | 4.75 | 1.1 |

30. குறிப்பிட்டதொரு பொருளாதாரம் தொடர்பாக பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்படுகின்றன.

பொதுமக்களிடமுள்ள சட்டமுறைப் பணத்தொகை ரூபா 1000 ஆகும்.
வணிக வங்கிகள் பேணிச் செல்லவேண்டுமென மத்திய வங்கி விதித்துள்ள ஒதுக்கு வீதம் 10%.
வணிக வங்கி அமைப்பின் இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| மொத்த வைப்புக்கள் | 1000 | ஒதுக்கங்கள் | 125 |
| | | கடன் | 875 |
| | 1000 | | 1000 |


மேலுள்ள வங்கியமைப்பில் மிகை ஒதுக்கு பூச்சியமாகும் நிலையில் வங்கியமைப்பின் ஆரம்ப வைப்பு மற்றும் ஒடுங்கிய பணநிரம்பல் எவ்வளவு?

| | **ஆரம்ப வைப்பு** | **M1 ஒடுங்கிய பணநிரம்பல்** |
|---|---|---|
| 1. | 1250 | 2250 |
| 2. | 1125 | 2125 |
| 3. | 1250 | 1250 |
| 4. | 2250 | 3250 |
| 5. | 2250 | 1250 |

31. பின்வரும் கூற்றுகளில் சரியான கூற்றைத் தெரிவு செய்க
1. திறைசேரி உண்டியல்கள் மீள்விற்பனை விகிதம், வட்டி விகித செல்வழியின் கீழ் எல்லையைச் சித்தரிக்கின்றது.
2. நிதிமுறைமையின் உறுதி நிலையைப் பேணுவதைக் காரணமாகக் கொண்டு வட்டி விகித செல்வழியின் மேல் மற்றும் கீழ் எல்லைகளிடையே இடைவெளி விரிவடைகின்றது.
3. மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டு சொத்து அதிகரித்தல் பண அடிப்படை ஒடுங்குவதற்குக் காரணமாகின்றது.
4. மத்திய வங்கியின் மூலம் வணிக வங்கிகளிடம் உள்ள பிணைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் வங்கி அமைப்பினுள் ஒதுக்குத் தொகை குறைவடையும்.
5. வங்கிகளுக்கிடையிலான திறைசேரி உண்டியல் பரிமாற்றம் காரணமாக வங்கியமைப்பினுள் ஒதுக்குத் தொகை மாற்றமடையாது.

32. சந்தை தோல்வியடைவதற்குக் காரணமாக அமைவது
1. தனியார் செலவு மற்றும் தனியார் நலன்களுக்கிடையே வேறுபாடு காணப்படாமை.
2. தனியார் செலவு மற்றும் சமூக நலன்களுக்கிடையே வேறுபாடு காணப்படாமை.
3. தனியார் நலன் மற்றும் மொத்தச் செலவுகளுக்கிடையே வேறுபாடு காணப்படாமை.
4. தனியார் செலவு மற்றும் மொத்த செலவுகளுக்கிடையே வேறுபாடு காணப்படல்.
5. தனியார் செலவு மற்றும் தனியார் நலன்களுக்கிடையே ஒற்றுமை காணப்படல்.

33. கீழேதரப்படுவது வரிப்படம் சந்தைப் பொருளாதாரத்தினுள் பரிமாற்றப்படுகின்ற ஒரு பண்டத்தின் கேள்வி நிரம்பல் நிலைமைகளாகும்.




மேலுள்ள வரிப்படத்தின்படி வெளிவாரிமூலம், வெளிவாரி செலவு அல்லது நலன் சமூகம் தொடர்பாக உத்தம நுகர்வு என்பவற்றை சரியாக ஒழுங்குபடுத்திக் காட்டும் விடையாவது

| | **வெளிவாரி மூலம்** | **வெளிவாரி செலவு/நலன்** | **உத்தம நுகர்வு** |
|---|---|---|---|
| 1. | உற்பத்தியில் நேர்வெளிவாரி | $P_3$ - $P_1$ வெளிவாரி நலனாகும் | $Q_1$ விளைவாகும் |
| 2. | உற்பத்தியில் எதிர்கணிய விளைவாகும் | $P_3 - P_2$ வெளிவாரி செலவாகும் | $Q_2$ வெளிவாரி |
| 3. | நுகர்வில் நேர்வெளிவாரி | $P_4 - P_2$ வெளிவாரி நலனாகும் | $Q_1$ விளைவாகும் |
| 4. | நுகர்வில் எதிர்கணிய விளைவாகும் | $P_4 - P_2$ வெளிவாரி செலவாகும் | $Q_1$ வெளிவாரி |
| 5. | நுகர்வில் எதிர்கணிய விளைவாகும் | $P_3$ - $P_1$ வெளிவாரி செலவாகும் | $Q_2$ வெளிவாரி |

34. பொருளாதார வகைப்படுத்தலின்படி இலங்கையின் அரசாங்கச் செலவுக் கட்டமைப்பை சரியாகக் காட்டும் விடை எது?

| | | | |
|---|---|---|---|
| 1. | பொருட்கள் மற்றும் சேவைகள் | வட்டிக் கொடுப்பனவு | நடைமுறை மாற்றல். |
| 2. | நடைமுறைச் செலவு | மூலதனச் செலவு | தேறிய கடன்வழங்கல். |
| 3. | பொதுச் நிர்வாகச் சேவைகள் | சமூக சேவைகள் | பொருளாதார சேவைகள். |
| 4. | பொருட்கள் மற்றும் சேவைகள் | சமூக சேவைகள் | பொருளாதார சேவைகள். |
| 5. | மூலதனச் செலவு | மாற்றல் செலவுகள் | வட்டிக் கொடுப்பனவு. |

35. அரசின் மூலம் குறிப்பிட்ட பண்டமொன்றின் மீது வரி விதிக்கப்பட்டமையினால் மிகையான வரிச்சுமை உருவாவது.

1. மொத்த வரிச்சுமையின் பெரும்பகுதியை உற்பத்தியாளன் தாங்கும்போதாகும்.
2. மொத்த வரிச்சுமையின் பெரும்பகுதியை நுகர்வோன் தாங்கும்போதாகும்.
3. உற்பத்தி மிகையில் மாற்றமொன்று ஏற்படாத போதாகும்.
4. பொருளாதார மிகைக்குப் பாதிப்பு ஏற்படும் போதாகும்.
5. நுகர்வோன் மற்றும் உற்பத்தியாளன் மிகையில் அதிகரிப்பொன்று ஏற்படும்போதாகும்.

36. கீழே தரப்படும் தகவல்களைப் பயன்படுத்தி அரச வரவுசெலவுத்திட்டத்தில் முதனிலைக் கணக்கின் மீதியையும், நடைமுறைக் கணக்கின் மீதியையும் கணிப்பிடுக.

வரி வருமானம................................800
வட்டிக் கொடுப்பனவு.........................280
மூலதனச் செலவு ........................520
நடைமுறைச் செலவு .......................850
வரியல்லாத வருமானம் ....................100

| | மூலதனக் கணக்கு மீதி | நடைமுறைக் கணக்கு மீதி |
|---|---|---|
| 1. | - 470 | -380 |
| 2. | 270 | 330 |
| 3. | - 190 | -350 |
| 4. | -190 | 50 |
| 5. | -50 | 190 |

37. கோதுமை மற்றும் புடவை உற்பத்தி செய்கின்ற X மற்றும் Y நாடுகளில் கோதுமை அலகொன்றின் உற்பத்திக்கு அவசியமான உழைப்பு அலகுகளின் தொகை மற்றும் புடவை அலகொன்றினை உற்பத்தி செய்வதற்கு அவசியமான உழைப்பு மணித்தியாலங்களும் கீழே தரப்படுகின்றன.

| | X நாடு | Y நாடு |
|---|---|---|
| கோதுமை அலகொன்றை உற்பத்திசெய்வதற்கான உழைப்பு மணித்தியாலங்கள். | 5 | 8 |
| புடவை அலகொன்றை உற்பத்திசெய்வதற்கான உழைப்பு மணித்தியாலங்கள். | 2 | 4 |

மேலுள்ள தகவல்களின்படி மிகவும் சரியான விடையாவது

1. புடவை உற்பத்திசெய்வதற்கான முழு நன்மை Y நாட்டுக்கு உண்டு.
2. கோதுமை உற்பத்திசெய்வதற்கான ஒப்பீட்டு நன்மை X நாட்டுக்கு உண்டு.
3. கோதுமை உற்பத்திசெய்வதற்கான முழுநன்மை Y நாட்டுக்கு உண்டு.
4. கோதுமை உற்பத்திசெய்வதற்கான ஒப்பீட்டு நன்மை X நாட்டுக்கு இருக்கும் அதேவேளை புடவை உற்பத்தி செய்வதற்கான ஒப்பீட்டு நன்மை Y நாட்டுக்குக் காணப்படுகின்றது.
5. கோதுமை உற்பத்திசெய்வதற்கான ஒப்பீட்டு நன்மை Y நாட்டுக்கு இருக்கும் அதேவேளை புடவை உற்பத்தி செய்வதற்கான ஒப்பீட்டு நன்மை X நாட்டுக்குக் காணப்படுகின்றது.

38. வெளிநாட்டு வர்த்தகத்துடன் தொடர்பான எண்ணக்கரு தகவல்கள் சில கீழே காட்டப்படுகின்றது.

| | |
|---|---|
| ஏற்றுமதி விலைச் சுட்டெண் | 120 |
| ஏற்றுமதி தொகைச் சுட்டெண் | 125 |
| இறக்குமதி விலைச் சுட்டெண் | 150 |
| ஏற்றுமதி பெறுமதிச் சுட்டெண் | 175 |

மேற்தரப்பட்ட தகவல்களின்படி பண்ட வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வருமான வர்த்தக மாற்று விகிதம் என்பவற்றைச் சரியாகக் காட்டும் விடையாவது.

| | பண்ட வர்த்தக மாற்று விகிதம் | வருமான வர்த்தக மாற்று விகிதம் |
|---|---|---|
| 1. | 116 | 125 |
| 2. | 116 | 83 |
| 3. | 80 | 116 |
| 4. | 80 | 65 |
| 5. | 68 | 83 |


39. சென்மதி நிலுவை அட்டவணையுடன் தொடர்புடைய கருதுகோள் ரீதியான சில தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| **விடயம்** | **பெறுமதி(பில்லியன் ரூபா)** |
|---|---|
| ஏற்றுமதி | 24 |
| வியாபாரக் கணக்கு மீதி | -23 |
| சேவைக் கணக்கு மீதி | 6 |
| முதலீட்டு வருமானம் தேறிய பெறுமதி | -12 |
| நாணய அசைவுகள் | 15 |

மேலுள்ள தகவல்களின் படி கட்புலனாகும் இறக்குமதிப் பெறுமதியையும், மூலதனம் மற்றும் நிதியியல் கணக்கு மீதியையும் காட்டும் விடையானது.

| | கட்புலனாகும் இறக்குமதி | பெறுமதி (ரூ. மில்லியன்) |
|---|---|---|
| 1. | 47 | 14 |
| 2. | 47 | --14 |
| 3. | 42 | 6 |
| 4. | 37 | 15 |
| 5. | 1 | -15 |

40. வேளிநாட்டுச் செலாவணிக்கான கேள்வி மாற்றத்தின் அடிப்படையில் வெளிநாட்டு நாணயமாற்று வீதம் மாற்றமடையும் விதத்தை பின்வரும் வரிப்படம் காட்டுகின்றது




மேற்தரப்பட்ட மாற்றத்திற்கு அடிப்படையாக அமையக்கூடியது கீழே காட்டப்படும் எந்நிகழ்வாகும்

1. வர்த்தகப் பங்காளர்களின் நாடுகளுக்குச் சார்பாக உள்நாட்டு விலைமட்டம் குறைவடைதல்.
2. வர்த்தகப் பங்காளர்களின் நாடுகளுக்குச் சார்பாக உள்நாட்டு விலைமட்டம் அதிகரித்தல்.
3. உள்நாட்டு விலைமட்டத்திற்குச் சார்பாக வர்த்தகப் பங்காளர்களின் விலைமட்டம் அதிகரித்தல்.
4. இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான போட்டித்தன்மை அதிகரித்தல்.
5. இலங்கையின் ஏற்றுமதி பதப்படுத்தும் கைத்தொழில்கள் விரிவடைதல்.

41. உலகமயமாக்கலுக்கு எதிராக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் இருந்து தொடுக்கப்படும் பிரபல்யமான வாதமாவது
   1. நலன்கள் ஏற்றத்தாழ்வாக பங்கீடு செய்யப்படும் என்பதாகும்.
   2. நாடொன்றில் ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினைகள் ஏனைய நாடுகளுக்கு விரைவில் பரவலாம் என்பதாகும்.
   3. உள்நாட்டுப் பேரின பொருளாதார முகாமைத்துவம் கஷ்டானதாகும் என்பதாகும்.
   4. விரைவான கைத்தொழில் மயமாக்கல் காரணமாக சூழல் மாசடைதல் அதிகரிக்கும்.
   5. சர்வதேச பயங்கரவாதம் மற்றும் போதைப்பொருள் பாவனையின் பரம்பல் அதிகரிக்கும் என்பதாகும்.

42. குறிப்பிட்ட ஒரு நாட்டின் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 8 வீதமாகவும் பணவீக்க விகிதம் 4.6 ஆகவும் சனத்தொகை வளர்ச்சி விகிதம் 1.4 வீதமாகவும் காணப்படுமாயின் மெய்ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீத வீதவளர்ச்சி அண்ணளவாக

1. 1%  2. 2%  3. 3.4%  4. 4.3  5. 6.6% ஆகும்

43. நாடொன்றின் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடைவதற்குக் காரணமாவது
1. சனத்தொகை அதிகரிப்பைவிடக் குறைந்த வேகத்தில் வருமானம் அதிகரித்தல்.
2. சனத்தொகை அதிகரிப்பைவிட கூடிய வேகத்தில் விலைமட்டம் அதிகரித்தல்.
3. மொத்தத் தேசிய உற்பத்தி நிலையாக இருக்கையில் சனத்தொகை குறைவடைதல்.
4. சனத்தொகை வளர்ச்சி வேகத்தைவிட அதிகமான வேகத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்தல்.
5. மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் சனத்தொகை என்பன நிலையாகக் காணப்படல்.

44. கினிகுணகத்தினால் அளவிடப்படுவது
1. முழுவறுமை மட்டமாகும்.
2. வருமானப் பகிர்வில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள்.
3. இடைவறுமை மட்டமாகும்.
4. பொருளாதார வளர்ச்சி மட்டமாகும்.
5. பொருளாதார உறுதியாகும்.

45. நிகழ்கால இலங்கையின் மானிட வறுமைச் சுட்டெண் மற்றும் கிராமிய துறையின் வறுமையைச் சரியாகக் காட்டும் விடையாவது

| | மானிட வறுமைச் சுட்டெண் | கிராமியத் துறையில் வறுமை |
|---|---|---|
| 1. | 15.7 | 6.7 |
| 2. | 11.4 | 8.9 |
| 3. | 9.4 | 5.3 |
| 4. | 8.9 | 5.3 |
| 5. | 8.9 | 9.4 |

46. இலங்கையின் சனத்தொகை அடர்த்தி அதிகமாக உள்ள மாவட்டங்கள் ஐந்தும் முறையே
1. கொழும்பு, காலி, கண்டி, கம்பஹா, கேகாலை.
2. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, கண்டி.
3. கொழும்பு, கண்டி, காலி, களுத்துறை, கம்பஹா.
4. கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, காலி.
5. கொழும்பு, காலி, கம்பஹா, கண்டி, குருநாகல்.

47. குறிப்பிட்ட ஒரு நாட்டின் சனத்தொகை 20 மில்லியனாகவும், வேலைசெய்யும் வயதிலான சனத்தொகை 12 மில்லியனாகவும், வேலைவாய்ப்பிலுள்ள சனத்தொகை 8 மில்லியனாகவும், வேலையின்மையிலுள்ள சனத்தொகை 2 மில்லியனாகவும் இருக்கின்றதெனில் ஊழியபபடையின் பங்குபற்றல் விகிதம் மற்றும் வேலையின்மையிலுள்ள சனத்தொகை விகிதம் முறையே
1. 40 % உம் 10 % உம்
2. 2. 60 % உம் 83 % உம்
3. 83 % உம் 20 % உம்
4. 60 % உம் 20 % உம்
5. 50 % உம் 10 % உம்

48. இலங்கையின் 2011 ஆம் ஆண்டிற்கான மானிட அபிவிருத்திச் சுட்டெண் யாது? இலங்கை அடைந்துள்ள நிலையை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுக.

| மனித அபிவிருத்திச் சுட்டெண்( ர்னுஐ) | பெறப்பட்ட நிலை |
|---|---|
| 1. 0.669 | 92 |
| 2. 0.791 | 92 |
| 3. 0.715 | 92 |
| 4. 0.695 | 97 |
| 5. 0.675 | 97 |

49. இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற “ரன்தொர” வேலைத் திட்டம் மூலம் செயற்படுத்த எதிர்பார்க்கும் வேலைத்திட்டங்களாவன
   1. வலு சக்தி அதிகரித்தல், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி.
   2. பெருந்தெருக்கள் நீர்ப்பாசனம் மற்றும் மகநெகும.
   3. துறைமுக மற்றும் விமான நிலையம் அதிவேகப் பாதை மற்றும் கல்விச் சீர்திருத்தம்.
   4. நீர்ப்பாசனம் மற்றும் சுகநலம், கெமி திரிய, கெமி புபுதுவ.
   5. கமநெகும, மகநெகும, கெமிதிரிய, கெமி புபுதுவ.

50. புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்திக் குறிக்கோள்களுள் இதுவரை இலங்கயினால் அடைந்து கொள்ளப்படாத இலக்காக அமைவது
   1. சகலருக்கும் ஆரம்பக்கல்வியை வழங்குவது.
   2. விவசாயமல்லாத துறைகளில் வேதனம் உழைக்கும் தொழில்களில் ஈடுபடுகின்ற பெண்களின் சதவீதத்தை அதிகரிக்கச் செய்தல்.
   3. வயது 5 இலும் குறைந்த பிள்ளைகளின் மரண வீதத்தைக் குறைத்தல்.
   4. ஒரு வயதிலும் குறைந்த பிள்ளைகளிடையே சின்னமுத்து நோய்க்கான தடுப்பூசியை பெற்றுக்கொண்ட சதவீதத்தை அதிகரித்தல்.
   5. தேசிய பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல் .

***